## தேசிய சேமிப்பு வங்கி – 2017

-----------------------------------------------------

தேசிய சேமிப்பு வங்கியினதும் ("வங்கி"), வங்கி மற்றும் அதன் துணைக் கம்பனியினதும் ("தொகுதி") 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றுக்கள் மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்றுக்கள், உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றுக்கள், காசுப்பாய்ச்சல் கூற்றுக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களும் ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1971 இன் 30 ஆம் இலக்க தேசிய சேமிப்பு வங்கி அதிகாரச்சட்டத்தின் 37 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் இந்த அறிக்கை வழங்கப்பட்டுள்ளது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு

-----------------------------------------------------------------------------

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை ("சபை") பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

-----------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் வங்கியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம் – வங்கி

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வங்கியின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சல்களினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**அபிப்பிராயம் – தொகுதி**

வங்கியினதும் அதன் துணைக் கம்பனியினதும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றினது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சல்களினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குதல் (எல்கேஏஎஸ்/எஸ்எல்எவ்ஆர்எஸ்)

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 186.1 மில்லியன் தொகையான கட்டிடங்கள் தொடர்பாக நடைபெற்று வரும் வேலையானது நிர்மாண வேலைகள் நிறுத்தப்பட்ட 18 அடுக்குமாடி கட்டிட நிர்மாணம் தொடர்பாக ஏற்பட்ட ரூபா 35.23 மில்லியன் தொகையான மூலதன செலவினத்தை பிரதிநிதித்துவப்படுத்துகிறது. மேற்குறிப்பிட்ட நிர்மாண வேலைகளுக்காக ஏற்படுத்தப்பட்ட கிரயமானது எல்கேஏஎஸ் 16 இன் பிரகாரம் மீள் இனங்காணப்பட்டிருந்தது. மேலும், அதற்காக ஏற்படுத்திய கிரயம் பயனற்ற செலவினமாகவிருந்தது.

### 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 94.7 மில்லியன் தொகையான மோசடியான காசு மீளப்பெறல்கள் பதிவு செய்யப்பட்டிருந்ததுடன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையான தொகையாக காட்டப்பட்டிருந்ததுடன் அதில், ரூபா 59.9 மில்லியன் தொகை ஒரு வருட காலத்திற்கு மேலாகவும் ரூபா 11.2 மில்லியன் தொகை 05 வருடங்களுக்கு மேலாகவும் தீர்க்கப்படாதிருந்தது.

(ஆ) ஏனைய சொத்துக்களாக காட்டப்பட்ட ரூபா 36,621,757 தொகையான அடகு முற்பணங்கள் தொடர்பில் பெறவேண்டிய காப்புறுதி கோரிக்கைகள் 2017 திசெம்பர் 31 வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் அவதானிக்கப்பட்ட இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| 1971 இன் 30 ஆம் இலக்க தேசிய சேமிப்பு வங்கி அதிகாரச்சட்டம் | |
| (i) 47 ஆம் பிரிவு | 10 ஆண்டுகளிற்கு மேலாக செயற்பாடற்றிருந்த வைப்புக்கள் கோரப்படாத வைப்பு ஒதுக்கங்கள் கணக்கிற்கு மாற்றப்பட்டிருக்க வேண்டும். எவ்வாறாயினும், 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களின் ரூபா 975.27 மில்லியன் ஆன அத்தகைய வைப்புக்கள் குறிப்பிட்ட ஒதுக்க கணக்கிற்கு மாற்றப்படாமல் செயற்பாடற்றிருந்ததென அவதானிக்கப்பட்டது. |
| (ii) 47(4) ஆம் பிரிவு | கோரப்படாத வைப்பு ஒதுக்க கணக்கிலிருந்து வாடிக்கையாளர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் வங்கியின் திரட்டு நிதியிலிருந்து திறைசேரியின் செயலாளருக்கு இயலுமான வகையில் செலுத்தப்பட வேண்டும். 2012 - 2017 ஆம் ஆண்டு காலப்பகுதியின் போது வங்கியானது ரூபா 275.42 மில்லியனை செலுத்தியிருந்த போதும், திறைசேரியின் செயலாளரினால் வங்கிக்குரிய மேற்கூறப்பட்ட தொகை மீளவழங்கப்பட்டிருக்கவில்லை. |

**3. நிதிசார் மீளாய்வு**

**3.1 நிதிசார் விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது வங்கியின் தொழிற்பாடுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் ரூபா 13,303 மில்லியன் ஆன வரிக்கு முன்னரான தேறிய இலாபத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 14,029 மில்லியன் ஆன வரிக்கு முன்னரான தேறிய இலாபத்தை விளைவித்திருந்தமையால் மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 726 மில்லியன் அல்லது 5.46 சதவீத முன்னேற்றமொன்றை சுட்டிக்காட்டுகின்றது. வட்டி வருமானத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு மற்றும் வியாபாரத்திலிருந்தான மிகை நிதிசார் விளைவுகளிலிருந்தான இந்த முன்னேற்றத்திற்கு பிரதான காரணமாகவிருந்தது.

மீளாய்வாண்டின் போது வங்கியின் துணைக் கம்பனியின் தொழிற்பாடுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் ரூபா 109 மில்லியன் ஆன வரிக்கு முன்னரான தேறிய இலாபத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 539 மில்லியன் வரிக்கு முன்னரான தேறிய இலாபத்தை விளைவித்திருந்தமையால் மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 430 மில்லியன் அல்லது 394 சதவீத முன்னேற்றத்தை சுட்டிக்காட்டுகின்றது. ரூபா 412 மில்லியனால் அல்லது 422 சதவீதத்தால் நியாயப்பெறுமதியினூடாக நிதிசார் கருவிகளிலிருந்தான தேறிய மிகையின் அதிகரிப்பு நிதிசார் விளைவுகளில் ஏற்பட்ட இந்த முன்னேற்றத்திற்கு பிரதான காரணமாகவிருந்தது.

மீளாய்வாண்டிற்கான ரூபா 8,336 மில்லியன் கூட்டுத்தொகையான ஆளணி வேதனங்கள், பெறுமானத்தேய்வு, செலுத்தப்பட்ட வரிகள், மற்றும் அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டிய வரிகள் போன்றவற்றை கணக்கிலெடுத்தன பின்னர் 2013 ஆம் ஆண்டின் பெறுமதிச் சேர்க்கை ரூபா 7,447 மில்லியனாக இருந்ததுடன் 2017 ஆம் ஆண்டில் இது ரூபா 24,834 மில்லியனுக்கு அதிகரித்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது வங்கியின் மொத்த பெறுமதிச் சேர்க்கை ரூபா 2,170 மில்லியனால் அல்லது 9.6 சதவீதத்தால் அதிகரித்தது.

மீளாய்வாண்டிற்கான வங்கியின் ஒட்டுமொத்த வருமானம் ரூபா 107,817 மில்லியனாகவிருந்ததுடன் முன்னைய ஆண்டின் ஒட்டுமொத்த வருமானம் ரூபா 87,399 மில்லியனுடன் ஒப்பிடும் போது இது ரூபா 20,418 மில்லியன் அதிகரிப்பொன்றை அல்லது 23.3 சதவீத அதிகரிப்பொன்றை காட்டுகின்றது.

## 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (அ) கிளைகளின் இலாபத்தன்மை

மீளாய்வாண்டின் போது வங்கியின் 18 கிளைகள், தலைமை அலுவலகம் மற்றும் வங்கியின் இரண்டு பிரிவுகளிடமிருந்து அறிக்கையிடப்பட்ட நட்டம் ரூபா 1,292 மில்லியன் கூட்டுத்தொகையாகவிருந்த அதேநேரம் வங்கியின் 235 கிளைகள் மற்றும் 02 பிரிவுகளின் வரிக்கு முன்னரான தேறிய இலாபமானது ரூபா 18,815 ஆகவிருந்தது.

### (ஆ) முக்கியமான கணக்கீட்டு விகிதங்கள்

கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம், மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான வங்கியின் சில முக்கியமான விகிதங்கள் துறை விகிதங்களுடன் சேர்த்து கீழே தரப்பட்டுள்ளன.

| | துறை விகிதங்கள் * | 2017 | 2016 |
|---|---|---|---|
| **இலாபத்தன்மை விகிதங்கள்** | **சதவீதமாக** | | |
| சராசரி பங்குதாரர் நிதிகள் மீதான திரும்பல் (ஆர்ஓஈ) | 19.2 | 26.52 | 29.37 |
| சராசரி சொத்துக்கள் மீதான திரும்பல் (ஆர்ஓஏ) | 1.5 | 1.46 | 1.5 |
| தேறிய வட்டி எல்லை | 3.2 | 2.7 | 2.98 |
| **மூலதனப் போதுமை விகிதங்கள்** | | | |
| இணைந்த மூலதனப் போதுமை விகிதம் – தட்டு I (ஆகக்குறைந்த எல்லை 6.25%) | 12.8 | 11.93 | 11.31 |
| மொத்த மூலதனப் போதுமை விகிதம் (ஆகக்குறைந்த எல்லை 11.75%) | 15.0 | 15.31 | 13.86 |
| **திரவ விகிதங்கள்** | | | |
| திரவச் சொத்து விகிதம் | 61.6 | 73.4 | 72.6 |

* இலங்கை மத்திய வங்கியினால் பிரசுரிக்கப்பட்ட தகவல்களிடமிருந்து துறைசார் விகிதங்கள் பிரித்தெடுக்கப்பட்டன.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2017 ஆம் ஆண்டில் வங்கியின் சராசரி உரிமையாண்மை மீதான வருவாய் (ஆர்ஓஈ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 2.85 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது எனினும், 2017 ஆம் ஆண்டிற்கான துறைசார் விகிதத்தை விட அதிகமாகவிருந்தது.

(ii) துறைசார் விகிதம் 61.6 சதவீதத்தை விட அதிகமாக திரவ விகிதம் அதிகமாக இருந்தமையால் வங்கியானது அவசியமற்ற திரவச் சொத்துக்களை, பேணியிருந்தது என வெளிப்பட்டது.

(iii) வங்கியின் முக்கிய மூலதனப் போதுமை விகிதம் மற்றும் மொத்த மூலதனப் போதுமை விகிதம் 2017 ஆம் ஆண்டின் இறுதியிலுள்ளவாறு முறையே 0.6 சதவீதம் மற்றும் 0.82 சதவீதமாக இருந்த போதிலும், இந்த விகிதங்களானது இலங்கை மத்திய வங்கியின் ஆகக்குறைந்த தேவைப்பாட்டை விட அதிகமாகவிருந்தது.

### 3.3 வங்கி மற்றும் வங்கிக்கு எதிராக தொடுக்கப்பட்ட சட்ட வழக்குகள்

கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், வங்கியானது மாவட்ட நீதிமன்றங்களில் வெளித்தரப்பினர்களுக்கு எதிராக 28 சட்ட வழக்குகளை கொடுத்துள்ளதுடன் அதில் 4 வழக்குகள் மூன்றாம் தரப்பினர்களிடமிருந்து ரூபா 17,298,058 கடன் தொகையை அறவிடுவதற்கு தொடுக்கப்பட்டது. அதேநேரம், இரண்டு வெளித்தரப்பினர்கள் ரூபா 4,000,000 இனை கோருவதன் மூலம் வங்கிகளுக்கு எதிராக சட்ட வழக்குகளை தொடுத்திருந்தனர். மேலும், வங்கியின் ஊழியர்கள் வங்கிக்கு எதிராக மனித உரிமைகள் ஆணைக்குழு, ஊழியர் நியாயசபை மற்றும் கைத்தொழில் நீதிமன்றத்தில் 52 வழக்குகளை பதிவு செய்திருந்தனர்.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 வங்கியின் செயலாற்றல்

#### 4.1.1 வங்கியின் சந்தைப்பங்கு

வங்கித்துறை மற்றும் உத்தரவாதமளிக்கப்பட்ட விஷேட வங்கித்துறையுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 05 வருடங்களின் வங்கியின் மொத்த சொத்துக்கள் மற்றும் வைப்புக்கள் தளத்தின் சந்தைப்பங்கு கீழே தரப்பட்டுள்ளன.

**சந்தைப்பங்கு**

| ஆண்டு | சொத்துத் தளம் | | வைப்புத் தளம் | |
|---|---|---|---|---|
| | வங்கித்துறையுடன் ஒப்பிடும் போது | உத்தரவாதமளிக்கப்பட்ட விசேட வங்கித்துறையுடன் ஒப்பிடும் போது | வங்கித்துறையுடன் ஒப்பிடும் போது | உத்தரவாதமளிக்கப்பட்ட விஷேட வங்கித்துறையுடன் ஒப்பிடும் போது |
| | சதவீதம் | சதவீதம் | சதவீதம் | சதவீதம் |
| 2017 | 9.83 | 74.08 | 9.96 | 75.64 |
| 2016 | 10.07 | 75.77 | 10.44 | 77.67 |
| 2015 | 10.50 | 76.39 | 11.03 | 77.97 |
| 2014 | 11.18 | 71.68 | 11.82 | 78.07 |
| 2013 | 11.01 | 71.18 | 12.04 | 81.33 |
| 2012 | 10.00 | 68.64 | 12.62 | 81.13 |


இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வங்கியின சராசரி சொத்துக்கள தளத்திலான சந்தைப் பங்கானது வங்கித்துறையுடன் ஒப்பிடும் போது 9.83 சதவீதமாகவிருந்த அதேநேரம் இது உத்தரவாதமளிக்கப்பட்ட விஷேட வங்கித்துறையுடன் ஒப்பிடும் போது அண்ணளவாக 74.08 சதவீதமாகவிருந்தது.

(ii) மேற்கூறப்பட்ட தகவல்களின் பிரகாரம், வங்கிக் தொழிற்துறையிலுள்ள வங்கியின் வைப்புத் தள சந்தைப்பங்கானது வங்கியின் அரசாங்கத்தால் முழுமையாக உரிமையாக்கப்பட்டு இறுதி பல வருடங்களிற்காக ‘‘ஏஏஏ’’ பிற்ச தரப்படுத்தலை பேணியிருந்தமை காரணத்தால் 2011 இல் 13.38 சதவீதத்திலிருந்து 2017 ஆம் ஆண்டில 9.96 சதவீதத்திற்கு 3.42 சதவீதத்தால் குறைவடைந்தது.

(iii) உத்தரவாதமளிக்கப்பட்ட விஷேட வங்கித்துறையிலுள்ள மொத்த வைப்புக்களின் பிரகாரம் வங்கியின் சந்தைப்பங்கு நிலைமையானது 2013 ஆம் ஆண்டின் பின்னர் இது பின்னடைவையும் போக்கையும் அறிக்கையிட்ட போதும் 75 சதவீதத்திற்கு மேலாக இருந்தது.

(iv) வங்கியின் மற்றும் வங்கித்துறையின் வைப்புத் தளத்திலுள்ள வருடாந்த வளர்ச்சி (வைஓவை) பின்வரும் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது.




அதற்கிணங்க, வங்கியின் வைஏவை வளர்ச்சியானது கவனத்திற்கொள்ளப்பட்ட காலப்பகுதியின் போது வங்கித்துறையின் வளர்ச்சியை விட குறைவாகவிருந்ததுடன் இது சட்டத்தில் குறிப்பிடப்பட்டவாறான விடயத்தின் அடைதலைவிட குறைவாகவிருந்தது.

### 4.1.2 சேமிப்பு புள்ளிகளின் தாபிப்பு

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது வங்கியின் சேமிப்பு புள்ளிகளின் தாபிப்புச் செயலாற்றல் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2017 | 2016 |
|---|---|---|
| கிளைகளின் எண்ணிக்கை | 253 | 250 |
| கணக்கு வைத்திருப்போரின் எண்ணிக்கை (மில்லியன்) | 19.898 | 19.285 |
| தன்னியக்க ரெலர் இயந்திரங்களின் எண்ணிக்கை | 286 | 279 |
| பாடசாலை வங்கிப் பிரிவுகள் | 2,239 | 2,858 |

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், 2017 ஆம் ஆண்டின் போது வங்கியானது 03 புதிய கிளைகளை திறந்திருந்தது. எனினும், 619 பாடசாலை வங்கி பிரிவுகள் மீளாய்வாண்டில் மூடப்பட்டது. 2017 ஆம் ஆண்டில் கணக்கு வைத்திருப்போரின் எண்ணிக்கை ஏறத்தாழ 613,000 ஆல் அதிகரித்திருந்தபோதும், சேமிப்பு தொகை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 2017 ஆம் ஆண்டில் 12 சதவீதத்தால் அதிகரித்தது. எனினும், மீளாய்வாண்டு காலப்பகுதியின் போது உத்தரவாதமளிக்கப்பட்ட விஷேட வங்கித்துறை 15 சதவீத முன்னேற்றத்தை அடைந்திருந்தது.

## 4.2 கடன் நிர்வாகம்

### 4.2.1 செயற்பாடற்ற கடன்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாகவுள்ள கடன் மீதிகள் ரூபா 299,304 மில்லியன் தொகையானதுடன் அதில் ரூபா 4,987 மில்லியன் அல்லது 1.7 சதவீதம் அத்திகதியிலுள்ளவாறு செயற்பாடற்ற கடன் மீதிகளாக காட்டப்பட்டிருந்ததுடன் இது 2016 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் ரூபா 280,718 மில்லியன் மற்றும் ரூபா 4,774 மிலியனாகவிருந்தது. மேலும், 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்பாடற்ற கடன் மீதிகளில், ரூபா 314.08 மில்லியன் தொகை அல்லது 6.3 சதவீதம் 3 வருடங்களிற்கு மேலாக நிலுவையாகவிருந்தது.

(ஆ) 05 வருடங்களிற்கு மேலாக நிலுவையாகவிருந்த ரூபா 94.96 மில்லியன் மற்றும் ரூபா 3.65 மில்லியன் தொகையான முறையே வீடமைப்பு கடன்கள் மற்றும் ‘‘ரட்ட இதுறு கடன்கள்’’ மேற்கூறப்பட்ட செயற்பாடற்ற கடன் மீதிகளில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(இ) செயற்பாடற்ற கடன் மீதிகளில், ரூபா 410.69 மில்லியன் அல்லது 8 சதவீதமானது செயற்பாடற்ற அடகு முற்பணங்களை பிரதிநிதித்துவப்படுத்தியது. மேலும், செயற்பாடற்ற கடன் மீதிகளில் 78 சதவீதத்திற்கு மேல் ஒன்று தொடக்கம் மூன்று வருடங்களிற்கிடையில் செயற்பாடற்ற வகைப்படுத்தலிருந்தது.

(ஈ) 2012 மே 11 இல் கொடுக்கப்பட்ட ரூபா 900,000 குறிப்பிட்ட தனிநபர் கடன் தொடர்பில் கணக்காய்வின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டது.

(i) இந்தக்கடன் மூல உடன்படிக்கைகளினை உள்ளடக்குகின்ற கோவையானது தவறாக வேறொரு இடத்தில் வைக்கப்பட்டிருந்தமையால் தற்காலிக கடன் கோவை கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ii) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அந்தக்கடனிலிருந்து இரண்டு தவணைக்கட்டணங்கள் மாத்திரம் அறவிடப்பட்டிருந்ததுடன் 2017 செப்தெம்பர் 20 இல் உள்ளவாறாக மொத்த நிலுவையான தொகை ரூபா 1,865,679 ஆகவிருந்தது.

(iii) வேறொரு இடத்தில் தவறாக வைத்தமை தொடர்பில் பொறுப்பாகவுள்ள அலுவலர்களிற்காக எந்தவொரு புலனாய்வும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iv) வங்கியின் கடன்கள் மீள் அறவீட்டுக் கொள்கையின் 8 மற்றும் 9 ஆம் பிரிவின் பிரகாரம் அல்லது பிணையாளர்களிடமிருந்து கடன்கள் அறவிடுவதற்கு எந்தவொரு சட்ட நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

வங்கிக்குரிய காணிகளின் சட்ட உரிமையாண்மையை பெற்றுக்கொள்ளாமல் இரண்டு காணிகளிலுள்ள கட்டிடங்களின் நிர்மாணத்திற்காக ரூபா 25.6 மில்லியன் தொகையை வங்கி ஏற்படுத்தியிருந்தது.

## 4.4 மோசடித் தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

2017 இன் இறுதியிலுள்ளவாறு வங்கியின் மோசடித் தன்மையிலான கொடுக்கல் வாங்கல்களின் மொத்தப் பெறுமதி ரூபா 94,748,200 தொகையானதுடன் அதில் 26 சந்தர்ப்பங்களில் ரூபா 47,299,260 தொகையான கொடுக்கல் வாங்கல்களில் வங்கியின் அலுவர்கள் நேரடியாக ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். மேலும், அத்தகைய மோசடித் தன்மையான கொடுக்கல் வாங்கல்களில் ஆறு கிளைகளில் அடகு பிணைகளை பெறுவதன் மூலம் அடகு கடன்களை கொடுப்பதில் ரூபா 18,319,191 தொகை அல்லது 19 சதவீதம் தொடர்புபடுத்தப்பட்டிருந்ததுடன் தன்னியக்க ரெல்லர் கருவிகளினூடாக மேற்கொள்ளப்பட்ட மோசடித் தன்மையான மீளப்பெறல் தொடர்பான தொகை ரூபா 42,984,600 ஆக இருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது.

## 4.5 பங்குகளில் முதலீடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 43 விலைகூறப்பட்ட கம்பனிகளின் பங்குகளிலுள்ள ஒட்டுமொத்த முதலீடுகள் ரூபா 6,249,271,030 தொகையாகும். ரூபா 4,350,499,429 தொகையான 32 கம்பனிகளில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளின் சந்தைப்பெறுமதி 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,449,079,468 ஆல் அல்லது 31 சதவீதத்தால் குறைவடைந்தது.

(ஆ) பொது வரையறுக்கப்பட்ட இலங்கை ரெலிகொம் மற்றும் ஹற்றன் நஷனல் வங்கியில் மேற்கொள்ளப்பட்ட முறையே ரூபா 445,642,518 மற்றும் ரூபா 1,655,815,624 தொகையான முதலீடுகள் மீதான வருவாய் 2017 ஆம் ஆண்டில் முறையே 2.37 சதவீத மற்றும் 4.8 சதவீத குறைந்த வீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தியது. "*விற்பனைக்காகவுள்ள முதலீடுகள் (ஏஎவ்எஸ்) நீண்டகால நலன் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது. ஆகையால், இத்தகைய பங்குகளின் மதிப்பீடு ஐந்து வருடங்கள் குறைந்த காலப்பகுதிக்காக அத்தகைய முதலீடுகளின் இலாபத்தன்மையை அடிப்படையாக கொண்டுள்ளது*" என இது தொடர்பில் தலைவர் அறிவித்திருந்தார்.

(இ) 9 கம்பனிகளில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 870,476,421 தொகையான முதலீடுகள் தொடர்பான பங்குலாபம் 2017 ஆம் ஆண்டிற்காக பெறப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் போது விலைகூறப்பட்ட கம்பனிகளின் பங்கு மூலதனத்தில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளினை விற்பனை செய்வதால் வங்கியால் ரூபா 56,377,578 நட்டமொன்று ஏற்படுத்தப்பட்டிருந்தது.

## 4.6 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

வங்கியின் தலைமை அலுவலகத்திற்காக 18 தொடர்மாடி கட்டிடத்தை கட்டியெழுப்புவதற்கு 2008 இலிருந்து ரூபா 35.23 மில்லியன் தொகை செலவழிக்கப்பட்டிருந்தது. இந்த இடமானது உயர் பாதுகாப்பு வலயத்தின் கீழ் உரிமையாக்கப்பட்டமையால் முன்னைய ஆண்டுகளிலிருந்து எந்தவொரு நிர்ணயமும் மேற்கொள்ளப்படாமையால் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நடைபெற்று வரும் வேலையில் காட்டப்பட்டிருந்தது. ஆகையால் அதற்காக ஏற்படுத்தப்பட்ட செலவீனம் பயனற்ற செலவீனமாக கருதப்பட முடியும்.

**4.7 வங்கியின் ஊழியர்களுக்கு எதிரான ஒழுக்காற்று நடவடிக்கைகளின் செயன் முன்னேற்றம்**

பதுளை கிளையில் காசு மோசடியில் ஈடுபடுத்தப்பட்ட ஊழியரிடமிருந்து ரூபா 8,973,750 காசு மோசடியை அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்ட போதிலும் மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு 2.5 மில்லியன் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. மேலும், அடகு பொருட்களை தவறாகப் பயன்படுத்துவது தொடர்பிலும் அதேநபர் குற்றஞ்சாட்டப்பட்டனர். எனினும், அதே நபர் 2013 மார்ச் 21 இலிருந்து சேவையிலிருந்து இடை விலகியமையால் ஒழுக்காற்று நடவடிக்கை நிறுத்தப்பட்டிருந்தது. வங்கியானது மேற்கூறப்பட்ட உத்தியோகத்தரிமிருந்து வஙிகிக்கு ஏற்பட்ட மொத்த நட்டத்தை அறவிடுவதற்கு வங்கியானது சட்ட நடவடிக்கையை எடுத்திருந்தது.

**4.8 மனித வளங்கள் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 4,853 ஆனதுடன் 2017 இன் இறுதியளவில் 3,947 நிரந்தர பதவியணிகளையும் 522 ஒப்பந்த அடிப்படையிலான பதவியனியையும் உள்ளடக்கி 4,469 ஊழியர்கள் வேலைக்கமர்த்தப்பட்டிருந்தனர். அதற்கிணங்க, 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 02 மிகையான பதவியணிகளுடன் 386 வெற்றிடங்களுமிருந்தது.

(ஆ) வெற்றிடங்களின் 250 அல்லது 29 சதவீதம் நிறைவேற்று தரத்திலிருக்கின்றதுடன் அத்தகைய பதவிகள் 2017 இறுதியளவில் 02 பிரதி பொது முகாமையாளர்கள் 11 உதவிப் பொது முகாமையாளர்கள், 16 பிரதம முகாமையாளர்கள், 3 சிரேஷ்ட முகாமையாளர்கள், 71 முகாமையாளர்கள் 139 உதவி முகாமையாளர்கள் மற்றும் 08 இரகசிய செயலாளர்கள் பதவிகள் போன்றவற்றை நிரப்பப்படாமலிருந்தனர். மேலும், பதவிநிலையற்ற தரத்தில் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 83 வெற்றிடங்கள் இருந்தது. ஆகையால், இந்த நிலைமை வங்கியின் சுமூக செயற்பாட்டை பாதகமாக பாதிக்கும்.

(இ) 2006 நவம்பர் 30 ஆந் திகதிய 657/2006 ஆம் இலக்க இடமாற்றக் கொள்கை (திருத்தம்) இன் பிரிவு 2.9 இன் பந்தி 2 இன் பிரகாரம், ஒரு கிளை / பிரிவில் சேவையாற்றும் உத்தியோகத்தொருவர் முகாமைத்துவத்தால் குறிப்பிடப்பட்ட விஷேட பிரிவிற்காக தவிர்ந்து 5 வருடங்களிற்கு மேலாக ஒரே இடத்தில் இருக்க கூடாது எனினும், கடன் பிரிவில் சேவை செய்கின்ற 21 ஊழியர்கள் மற்றும் வழங்கல்கள் பிரிவிலுள்ள 07 ஊழியர்கள் மேற்கூறப்பட்ட சுற்றறிக்கைக்கு இணங்காமல் 07 வருடங்களிற்கு மேலாக அந்த கிளையில் இருந்தனர்.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 செயல்நடவடிக்கைத் திட்டம்**

சில்லறை, அட்டை நிலையம், கூட்டுறவு நிதி, சர்வதேச வங்கி, சந்தைப்படுத்தல், தகவல் தொழில்நுட்பம், இடங்கள், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி போன்ற 08 நிலையங்கள் தொடரெல்லை மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கபட்ட பதின்மூன்று இலக்குகளினை மீளாய்வாண்டின் போது அமுல்படுத்தியிருக்கவில்லை.

## 5.2 உள்ளக கணக்காய்வு

உள்ளக கணக்காய்வு பிரிவின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 73 ஆகவிருந்ததுடன் உள்ளபடியாக பதவியணி 2017 ஆம் ஆண்டிற்காக 44 ஆகவிருந்தது. அதற்கிணங்க, 36 வெற்றிட பதவி மற்றும் 07 மிகையான பதவிகள் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதவியணியிலிருந்தது. இரண்டு உதவி பொது முகாமையாளர் (உள்ளக கணக்காய்வு), 3 பிரதம முகாமையாளர் மற்றும் 4 சிரேஷ்ட முகாமைத்துவப் பதவிகள் மேற்குறிப்பிடப்பட்ட வெற்றிட பதவி நிலைகளில் உள்ளடக்கப்பட்டிருந்தனர். தரம் III-I தரத்திலுள்ள 07 முகாமையாளர் பதவிகள் (கணக்காய்வு) மற்றும் தரம் III-II இலுள்ள 10 உதவி முகாமையாளர் பதவிகள் (கணக்காய்வு) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வெற்றிடமாகவிருந்தது. அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 01 மொழிபெயர்ப்பாளர் (ஆங்கிலம்) பதவி உள்ளடக்கப்பட்டிருந்த போதும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பிரிவின் உள்ளபடியான பதவியணியில் எவரும் வேலைக்கமர்த்தப்பட்டிருக்கவில்லை.

## 6. தீர்க்கப்படாத கணக்காய்வு பந்திகள்

### சர்வதேச பிணைமுறி வழங்கல் - 2013 மற்றும் 2014

2012 திசெம்பர் 19 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம், ஐ.அ.டொலர் 1,000 மில்லியன் தொகையான சர்வதேச பிணைமுறிகளை வழங்குவதற்கும் அந்த கடன்களை மீளச்செலுத்தவும் செயற்திட்டங்களிற்கு நிதியிலிடுவதற்காக உரிய கடன்களை வழங்குவதற்கு இயலுமையுள்ள அரச உடமையாக்கப்பட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி பொது முயற்சிகளுக்கு இந்த நிதிகளை கடன் வழங்குவதற்கும் அமைச்சரவை அதன் அங்கீகாரத்தை வழங்கியிருந்தது. அதற்கிணங்க, வங்கியானது வருடாந்தம் 8.875 சதவீதம் மற்றும் 5.15 சதவீத வட்டி வீதத்தில் முறையே 2013 ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 750 மில்லியன் மற்றும் 2014 ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 250 மில்லியன் பெறுமதியான சர்வதேச பிணைமுறிகளை வழங்கியிருந்தது.

முறி பெறுகைகளின் மொத்த தொகை ஞாபகக்குறிப்பை வழங்குவதன் தேவைப்பாடுகளுடன் இணங்காமல் முறி பெறப்பட்ட திகதியிலிருந்து திறைசேரி முறிகள் மற்றும் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. நான்கு ஆண்டு காலப்பகுதியின் போதும் மீளாய்வாண்டு வரை முறி பெறுகைகளின் முதலீடுகளின் மீதான வருமானம் மற்றும் முறி வழங்குவது சார்பாக ஏற்படுத்தப்பட்ட செலவினம் கீழே தரப்பட்டுள்ளன.

| ஆண்டு | முறியின் பெறுமதி | மொத்த வருமானம் | சதவீதம் | மொத்த செலவினங்கள் | சதவீதம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா. | ரூபா. | % | ரூபா. | % |
| 2014 | 32,966,250,000 | 917,907,255 | *9.32 | 534,033,203 | *5.42 |
| 2015 | 36,015,000,000 | 2,962,110,449 | 8.22 | 1,764,281,301 | 4.90 |
| 2016 | 37,437,500,000 | 3,026,575,503 | 8.08 | 1,890,383,656 | 5.05 |
| 2017 | 38,307,500,000 | 3,709,392,852 | 9.68 | 1,973,662,773 | 5.15 |

* 109 நாட்கள் தொடர்பிலான வட்டி வருமானம்/ செலவினங்கள் சதவீதத்தை அடைவதற்காக வருடாந்தமாக்கப்பட்டது.

அதற்கமைய முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 2017 ஆம் ஆண்டில் 8.08 சதவீதத்திலிருந்து 9.68 சதவீதம் வரை வருமானது 1.6 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன் முறியின் வினைத்திறனான கிரயம் 0.1 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. மேலும்,

**ஐ.அ.டொலர் 1000 மில்லியன் சர்வதேச முறியின் ஒட்டுமொத்த வருமானம் மற்றும் செலவினம்**

-----------------------------------------------------------------------------------------------------------------------

வங்கியானது 2017 திசெம்பர் 31 வரை விநியோகித்த முறிகள் தொடர்பில் ரூபா 46,501,738,449 கூட்டுத்தொகையானது வட்டி மற்றும் ஏனைய செலவினமாக செலவழித்திருந்த அதேநேரம், பிணை பெறுகைகளை அதே காலப்பகுதியின் போது முதலீடு செய்ததன் மூலம் ரூபா 57,833,850,952 வருமானமொன்றை உழைத்திருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| ஆண்டு | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் இறுதியில்லுள்ளவாறான மொத்த றெுமதி | மொத்த வட்டி மற்றும் ஏனைய செலவினம் | சதவீதம் | மொத்த வட்டி வருமானம் | சதவீதம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | | ரூபா | |
| 2013 | 98,250,000,000 | 2,559,549,750 | *9.06 | 3,153,860,053 | *11.16 |
| 2014 | 131,865,000,000 | 9,248,552,817 | 7.01 | 13,155,256,934 | 9.98 |
| 2015 | 144,060,000,000 | 10,874,010,110 | 7.55 | 13,818,036,954 | 9.59 |
| 2016 | 149,750,000,000 | 11,659,635,954 | 7.79 | 13,377,696,227 | 8.93 |
| 2017 | 153,230,000,000 | 12,159,988,818 | 7.94 | 14,329,000,784 | 9.35 |
| **மொத்தம்** | | **40,501,738,449** | | **57,833,850,952** | |

* 105 நாட்கள் தொடர்பிலான வட்டி வருமானம் / செலவீனங்கள் சதவீதத்தை அடைவதற்காக வருடாந்தமாக்கப்பட்டது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 ஆம் ஆண்டின் இறுதியளவில் முறிகளின் சராசரி செலவினம் 7.74 சதவீதமாகவிருந்தது. மேலும், முறிகளின் மொத்த செலவீனங்களானது முறியின் பெறுமதியுடன் ஒப்பிடும் போது 2017 ஆம் ஆண்டில் 0.15 சதவீதத்தால் அதிகரித்தது. மேலும், முறிகளானது 2018 மற்றும் 2019 இல் முதிர்ச்சியடையும் போது டொலர்களை வழங்குவதற்கும் முதலீட்டாளர்களுக்கு மீளச் செலுத்துவதற்கும் வங்கியானது எந்தவொரு முன்னோக்கிய மாற்றுவீத உடன்படிக்கையிலும் கைச்சாத்திட்டிருக்கவில்லை.

(ஆ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 2017 ஆம் ஆண்டில் உழைத்த சராசரி மொத்த வருமானம் 8.93 சதவீதத்திலிருந்து 9.35 சதவீதம் வரை குறைவடைந்திருந்தது. சராசரி மொத்த வருமானம் 9.35 சதவீதமாகவும் சராசரி மொத்த செலவினம் 7.94 சதவீதமாகவும் இருந்ததால் வங்கியானது 2017 ஆம் ஆண்டின் இறுதியளவில் 1.14 சதவீத மிகையை உழைக்கமுடிந்தது.

**நிர்மாண வேலைகளிலுள்ள காலதாமதங்கள்**

நான்கு கிளைகளின் நிர்மாண வேலைகள் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும், (2011 ஆம் ஆண்டில் மூன்று கிளைகள் மற்றும் 2012 ஆம் ஆண்டில் ஒரு கிளை) அத்தகைய கிளைகளின் நிர்மாண வேலைகள் 2017 திசெம்பர் 31 வரையிலும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. அதனால், அத்தகைய கிளைகளை கொண்டு நடாத்துவதற்காக வாடகை அடிப்படையில் பெறப்பட்ட கட்டிடத்திற்காக ரூபா 11.89 மில்லியன் தொகையான வாடகை செலுத்த வேண்டியிருந்தது. நிர்ணயித்த காலப்பகுதிக்குள் நிர்மான வேலைகள் பூர்த்தி செய்ய முடிந்தால் இந்த வாடகை கொடுப்பனவுகளை சேமிக்க முடிந்திருக்கும்.

**வேரஸ் கங்கா ஸ்ரோம் நீர் வடிகாலமைப்பு செயற்திட்டத்திற்கான நிதி வசதி (இலங்கை காணி மீட்சி மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனம் - (எஸ்எல்எல்ஆர்டிசி)**

2013 யூன் 26 இல் நடைபெற்ற சபைக்கூட்டத்தில் மேற்கூறப்பட்ட செயற்திட்டத்திற்காக ரூபா 14,227 மில்லியன் கடன் வசதிக்காக இயக்குனர் சபையின் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. மேலும், 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் நிலுவையாகவுள்ள வட்டிக்கொடுப்பனவுகளை வேறுபடுத்துவதற்கும் அதனை அரையாண்டு அடிப்படையில் மூலதனமாக்குவதற்கும் சபையானது அங்கீகாரம் வழங்கியிருந்தது. அதற்கிணங்க, ரூபா 2,550 மில்லியன் தொகையான கடன் 2014 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டிருந்ததுடன் ரூபா 2,550 மில்லியன் தொகையான மொத்த மீளளிப்பு மற்றும் ரூபா 252 மில்லியன் மூலதனமாக்கப்பட்ட வட்டி போன்றவற்றை உள்ளடக்கி ரூபா 2,802 மில்லியன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவையான தொகையாகவிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கடன் உடன்படிக்கையின் பிரகாரம், ரூபா 592.79 மில்லியன் அரையாண்டு தவணைக்கட்டணத்துடன் மூலதன மீள்கொடுப்பனவு தொடங்கப்படுவதற்கு 2016 ஒக்தோபர் 24 இல் பட்டியலிடப்பட்டிருந்த போதிலும், இந்த காலப்பகுதி வங்கியால் 2018 ஏப்ரல் 23 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

(ii) 2018 மே 22 இல் நடைபெற்ற சபை கடன் குழுவின் பிரகாரம், ரூபா 2,802 மில்லியன் வரை கடன் வசதியை வரையறுப்பதன் மூலம் கடன் உடன்படிக்கையில் நிபந்தனைகளை திருத்துவதற்கும் மூலதன மீள்கொடுப்பனவை 2018 ஒக்தோபர் 24 இலிருந்து தொடங்குவதற்கும் குழுவானது சிபாரிசு செய்தது. எனினும், இது தொடர்பில் புதிய உடன்படிக்கை 2018 யூலை 31 வரையிலும் வங்கி மற்றும் எஸ்எல்எவ்ஆர்டீசீக்கு இடையில் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

## 7. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் வங்கியின் தலைவரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதுடன் பின்வரும் கட்டுப்பாட்டு பரப்புக்கள் தொடர்பாக விஷேட கவனம் கோரப்படுகின்றது.

| **முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்** | **அவதானிப்புக்கள்** |
| --- | --- |
| சேமிப்புக்களை ஊக்குவித்தல் | வங்கியின் நோக்கம் சேமிப்புக்களை ஊக்குவித்தலாக இருந்த போதிலும் வங்கித்துறையின் முன்னேற்றத்துடன் ஒப்பிடும் போது சேமிப்புக்களின் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அவதானிக்கப்படவில்லை. |

| | |
|---|---|
| சந்தைப் பங்கின் பேணுகை | வங்கியினது சந்தைப் பங்கானது தொடர்ச்சியாக குறைவடைந்தமை அவதானிக்கப்படாததால் அதனை பேணுவதற்கும் முன்னேற்றுவதற்கும் திட்டமொன்றை கொண்டிருக்கவில்லை. |
| டொலர் முறி பெறுகைகளின் பயன்பாடு | 2014 ஆம் ஆண்டிலிருந்து குறிப்பை வழங்குவதன் பிரகாரம் உட்கட்டமைப்பு செயற்திட்டங்களுக்கு வசதியளிப்பதற்காக பெறப்பட்ட ஐ.அ.டொலர் 250 மில்லியன் பெறுமதியான முறிகளை வழங்குவதிலிருந்து பெறப்பட்ட முழுப்பணத்தையும் வங்கி பயன்படுத்தியிருக்கவில்லை. |